## வலப்பனை பிரதேச சபை

## நுவரஎலிய மாவட்டம்

---------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 06 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, வலப்பனை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------------

1.3.1 தொங்கல் கணக்கு

------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 5,497 ஆகக் காணப்பட்டதுடன் அம்மீதி ஏற்படுவதற்கான அடிப்படையான காரணங்களை பரிசோதனை மேற்கொண்டு தீர்ப்பதற்காக கணக்காய்வு திகதியாகிய 2015 ஏப்ரல் 08 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.2 பெற வேண்டிய கணக்குகள்

--------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடக் கூடிய துணைச் சேவைக் கணக்கின் மீதியின் பெறுமதி ரூபா 40,049,134 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 1,753,856 தொகை ஒரு வருட காலத்தை மிகைத்திருந்தது.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

---

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்குகள் 02 இன் கூட்டுத்தொகை ரூபா 50,034,246 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,735,771 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

(அ) தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 19,908,636 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) சபையினால் 2014 ஆண்டிற்காக கணப்பீடு ஒன்று மேற் கொள்ளப்பட்டு கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்காமையால் ரூபா 5,513,959 பெறுமதியான அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் பொருத்துக்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் பொதுக் களஞ்சிய மீதிகள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159 | சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானங்கள் நாளதுவரை அறவிடப்படாமையால் 2014 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 3,464,615 இற்கான நிலுவை தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 218 | சுபைக்குச் சொந்தமான காணிகள் கட்டடங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4.6 | சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, சேவையை இடைநிறுத்திய, இறந்துள்ள மற்றும் விபரங்களை இனங்காண முடியாத 75 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 312,600 இற்கான கடன் மீதியை அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,168,770 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,991,713 ஆக காணப்பட்டமையால் மிகையில் ரூபா 2,177,057 இற்கான அதிகரிப்பு ஒன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மிகையினை முன்னைய ஆண்டின் மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 2,177,057 இற்கான அதிகரிப்பு ஒன்று காணப்பட்டதுடன் அதற்காக 2014 ஆண்டின் போது 05 வருமான விடயங்களில் வருமானம் நூற்றிற்கு 05 முதல் நூற்றிற்கு 56 வரையான வீச்சில் மிகைத்தலும், 07 செலவு விடயங்களில் செலவு நூற்றிற்கு 08 முதல் நூற்றிற்கு 71 வரையான வீச்சில் குறைதலும் காரணமாகியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-------------------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு,

| வருமான விடயம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2014.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவையின் அறவீடுகள் | 2014 ஆண்டின் போது பில் போடப் பட்டவை | அறவீடுகள் ஆண்டிற்கான பில் போடப் பட்டவைகளின் அறவீடுகள் | 2014.12.31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 1,588,879 | 412,799 | 2,068,014 | 1,313,332 | 1,930,789 |
| கடை வாடகை | 1,293,248 | 320,042 | 1,282,650 | 705,555 | 1,550,301 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | - | - | 1,837,460 | 1,837,460 | - |
| ஏனையவைகள் | 2,535,598 | 114,911 | 3,555,871 | 3,262,687 | 2,714,482 |

2.3.2 வீதவரி

-----------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,930,789 இற்கான நிலுவை வரியினை அறவீடு செய்வதற்காக 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் பிரிவு 33 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.3 நீதிமன்றத் தண்டப்பண மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த தொகைகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| | -------- |
| நீதிமன்றத் தண்டப்பணம் | 1,632,139 |
| முத்திரைக் கட்டணம் | 2,893,030 |

2.3.4 விளம்பர அறிவித்தல் பலகை கட்டணம்

-----------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தல் பலகைகள் தொடர்பாக துணை விதிகள் ஆக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் முறைப் பிரகாரம் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கட்டணங்களை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.4 மிகை விதிப்பு

-----------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட ரூபா 29,975 இற்கான மிகை விதிப்புத் தொகை ஒன்று 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

--------------------------------------

வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்கு இணங்கியமையினை உறுதிப்படுத்துவதற்காக பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகையினை காட்டும் முன்னேற்ற அறிக்கை மற்றும் நிருவாக அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

3.2.1 முன் பொருத்து கொங்கிரீட் அச்சுக் கற்கள் உற்பத்தி செய்யும் செயற்திட்டம்.

------------------------------------------------------------------------------------------------------------------------

மாதாந்த வருமானம் ரூபா 100,000 சபை உழைத்து வந்த, 2011 ஆண்டு முதல் செயற்பட்டுவந்த முன் பொருத்தும் கொங்கிரீட் அச்சுக் கற்கள் உற்பத்தி செய்யும் செயற்திட்டம் 2014 ஆண்டின் போது முறையாக செயற்படாமையால. சபை பாரிய வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

3.2.2 பயன்படுத்தப்படாத / குறைபாட்டுச் சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான 11 சொத்து விடயங்கள் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

3.2.3 திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்

----------------------------------------------------------------

சபை திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவத்திற்காக முறையான நடைமுறை ஒன்று கடைபிடித்திருக்கவில்லை. அத்துடன், சுற்றாடல் மாசடையும் விதமாக ராகல லின்ஸ்டேல் தோட்டத்திற்கு குப்பைகள் குவிக்கப்பட்டு காணப்பட்டது.

4 கணக்களி பொறுப்பும் நல்லாட்சியும்

--------------------------------------------------------------

4.1 பாதிட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 07 வருமான விடயங்களில் நூற்றிற்கு 09 முதல் நூற்றிற்கு 109 வரையும், 07 செலவு விடயங்களில் நூற்றிற்கு 07 முதல் நூற்றிற்கு 247 வரையும் முரண்கள்

அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) கணக்கீடு

(ஈ) கடன் பட்டோர் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) சொத்துக்கள் நிருவாகம்